நாள்: 23.07.2026

HMOP 230/2022 JTW 211/25

பெயர் ராஜ்குமார்

ம.சா.1

<u>**குறுக்கு விசாரணை**</u>

திருமணத்தின்போது எங்கள் வீட்டில் 50 பவுன் நகை கேட்டு 27 1/2 பவுன் போட்டார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் எதுவுமே கேட்கவில்லை. அவர்களாவே 24 1/2 பவுன் போட்டார்கள். திருமணத்தின்போது எனக்கு தனியாக 4 1/2 பவுன் நகை போட்டார்கள் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் உத்தமபாளையம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் DVC 11/25 மனுவிசாரணையின் போது நான் 27 1/2 பவுன் நகை என்னிடம் இருப்பதாக ஒத்துக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் நகையை என் மனைவி அடகு வைத்து எனக்கு தரவேண்டிய 11 லட்சத்தில் 5 லட்சத்தை தந்தார்கள் என்று தான் சாட்சியம் அளித்துள்ளேன். திருமணத்தி்போது எங்கள் வீட்டில் 15 லட்சம் செலவு செய்தேன் என சொல்லியுள்ளேன், அதை நிருபணம் செய்ய ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தேவையில்லை என்பதால் தாக்கல் செய்யவில்லை.

என்னுடைய எதிருரையில் நான் என் மனைவிக்கு நிச்சயதார்த்ததின் போது 11 பவுன் நகையை மீண்டும் என்னிடம் கொடுத்து என் மனைவி அடகு வைத்துவிட்டார் என்று சொல்லியுள்ளேன். நான், என் மனுவில் கேரளாவில் என் மனைவியை எந்த ஊருக்கு அழைத்து சென்றேன் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் மனைவி தான் என்னை கோவிலுக்கு அழைத்து செல்வார். அதற்கான வாடகையை நான் கொடுத்துவிடுவேன். நான் கம்பத்தில் ஆச்சி பேங்கர்ஸ் என்ற பெயரில்நகை அடகுகடை வைத்து நடத்திவருகிறேன். என் மாமனார் அடகுவைத்தாக சொல்லக்கூடிய அடகு ரசீதை எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மனைவிக்கு 11 ல ட்சம் கொடுத்ததை நிருபணம் செய்ய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மனைவி தாக்கல் செய்த சத்திய பிரமான வாக்குமூலத்திலேயே 11 லட்சம் வாங்கியதை ஒத்துக்கொண்டார்.

என் மனைவியின் தம்பி ஜெயசூர்யா 5 பவுன் நகையை எனது ஆச்சி பேங்கர்சில் அடகு வைத்தார். அது ஏலத்திற்கு போய்விட்டது. எனது மனைவி சித்தி லதாவிற்கு குழந்தை இல்லாததால் என் மனைவி விரதம் இருந்து வருவதாக கூறி என்னுடன் தாம்பத்ய வாழ்க்கையை மறுத்து வந்துள்ளார் என என்னுடைய மனுவில் 12வது பத்தியில் சொல்லியுள்ளேன். அது சம்பந்தமாக லதாவை விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் வழக்கிற்கு தேவைப்பட்டால் லதாவை விசாரிக்கலாம். திருமணம் முடிந்து 2 வருடம் கழித்து தான் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்தேன். என் மனைவியுடன் 2 ஆண்டுகள் தாம்பத்ய உறவு இல்லை என்றால் உடனடியாக நான் விவாகரத்து மனு தாக்கல் செய்திரு்பேன் என்றும், நான் விவாகரத்து பெறவேண்டும் என்பதற்காக பொய்யான சங்கதிகளை கூறினேன் என்றால் சரியல்ல. நானும், என் பெற்றோரும் கூடுதல் வரதட்சனையாக 23 1/2 பவுன் கேட்டு என் மனைவியை வீட்டை விட்டு அடித்து விரட்டிவிட்டோம் என்றால் சரியல்ல.

என் மனுவில் எதிர்மனுதாரர் பெற்றோர் பொருளாதார வசதி இல்லாதத நபர் என்றால் சரிதான். அவ்வாறு உள்ள சூழ்நிலையில் என்னை வீட்டோடு மாப்பிளையாக அழைத்தார்கள் என சொல்லியிருப்பது ஏற்றுக்கொள்ளகூடியது அல்ல என்றால் சரியல்ல. என் மனைவியின் நகைகளை நான் அடகு வைத்துவிட்ட நிலையில் என் மனைவி தாலியை கழட்டி எறிவதற்கு வாய்ப்பில்லை என்ாறல் சரியல்ல. 3 முறை

தாலியை கழட்டி எறிந்துள்ளார். என் மனைவி அடிக்கடி சண்டைபோட்டு அவர் பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிடுவார் என்று சொல்லியிருப்பது பொய்யானது என்றால் சரியல்ல. என் மனைவி செவ்வாய், வெள்ளிக்கிழமையில் கோவிலுக்கு செல்வது மூடநம்பிக்கை என மனுவில் சொல்லியுள்ளேன் என்றால் கேரளாவில் உள்ள குட்டிகருப்பு கோவிலுக்கு செல்லக்கூடாது என தான் சொன்னேன்.

கோவிலுக்கு செல்வது என் மனைவியின் தனிப்பட்ட சுதந்திரம் என்றும், அதை நான் கொச்சைப்படததி கோவிலுக்கு செல்லகூடாது என சொன்னேன் என்றால் கேரளாவில் உள்ள குட்டிகருப்பு கோவிலுக்கு செல்லக்கூடாது என்று தான் சொன்னேன். மற்ற கோவிலுக்கு செல்வதை நான் ஆட்சேபிக்கவில்லை. என் மனைவி தற்கொலை செய்து கொள்வதாக என்னிடம் கூறியது சம்பந்தமாக நான் காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் என் மனைவி மீது உத்தமபாளையம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுதது விசாரணைக்கு ஆஜரான என் மனைவி என்னுடன் சேர்ந்து வாழ்வதாக சொன்னார் என எழுதிக்கொடுத்தார். காவல்நிலையத்தில் நானும் சேர்ந்து வாழ ஒத்துக்கொண்டேன். காவல்நிலையத்தில் சேர்ந்து வாழ்வதாக எழுதிக்கொடுத்துவிட்டு இந்த விவாகரத்து மனுவை தாக்கல் செய்தேன் என்றால் என் மனைவி சேர்ந்து வாழ வராததால் தான் தாக்கல் செய்தேன். நான் என் மனைவியுடன் சேர்ந்து வாழ எந்த முயற்சியும் எடுததததாக என் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் எங்கள் ஊரில் உள்ள முக்கியஸ்தர்களை வைத்து சேர்ந்து வாழ பேசினேன்.

என் மனைவி சேர்ந்து வாழ வேண்டும் என மனு தாக்கல் செய்துள்ளார். நான் விவாகரத்து கோரி தாக்கல் செய்துள்ள மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் முழுவதும் தவறானது என்றும், என் மனைவியின் நகைகளை திருப்பி கொடுக்காமலும் வேறு திருமணம் செய்வதற்காவும் தான் இந்த விவாகரத்து மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மனைவி என்னுடன் பழைய பிரச்சனைகளை மறந்து விட்டு எந்த நிபந்தனைகளும் இன்றி சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றால் நான் தயாராக இல்லை. அதனால் என் விவாகரத்து மனுவை தள்ளுபடி செய்து என் மனைவி சேர்ந்து வாழ வேண்டும் என தாக்கல் செய்த மனுவை அனுமதிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.07.23 17:36:21 +0530

சார்பு நீதிபதி
உத்தமபாளையம்